1980 பிப்ரவரி 6]

பள்ளிப்பத்து ஊராட்சிமன்ற எல்லைக்குள் கூடுதல் மின்மாற்றிகள் நிறுவுதல்.

*வினா எண். 62 திரு. இரா. அமிர்தராஜ், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்துகீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்செந்தூர் தாலுகா, பள்ளிப்பத்து ஊராட்சி மன்ற எல்லைக்குள் அடிஷனல் மின்சார டிரான்ஸ்பார்மர் ஒன்றினை நிறுவ எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திருச்செந்தூர் தாலுகா, பள்ளிப்பத்து, ஊராட்சிமன்ற எல்லைக்குள், இரு 63 கே. வி. ஏ. கூடுதல் மின்மாற்றிகள் நிறுவனம் மின்வாரியத்தால் மதிப்பீடுகள் அனுமதிக்கப் பட்டுள்ளன. இவ் வேலை இவ்வாண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. இரா. அமிர்தராஜ்: தலைவர் அவாகளே, அந்த டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்படாத காரணத்தினால், பல்வேறு இடங்களிலும் உள்ள விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்னைக்கு அமைச்சர் அவர்கள் முன் உரிமை கொடுத்து, மிக விரைவில் இவைகளை அமைக்க ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் மார்ச் மாதம் என்பது வெகு தொலைவில் இல்லை.

திரை அரங்குகளில் மின்சார ஏற்பாடுகளைப் பார்வையிடல்.

*வினா எண் 63—திரு.மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திரைப்பட அரங்குகளில் மின்சார ஏற்பாடுகளைப் பார்வையிட கட்டணங்கள் அதிகமாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) மேற்படி அதிகக் கட்டணங்களைக் குறைக்க வேண்டுமென்று திரைப்பட அரங்கு உரிமையாளர்களிடமிருந்து அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?